மஞ்சு மந்திரின்

V 20 No. 4 1.8.47

20-4


JL
Q2002 11, N27 mm
N47.20.4;1
210390

THE REGISTRAR OF BOOKS
8 AUG 1947

397

ॐ श्रीगुरुभ्यो नमः

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol. 20 | ஸர்வஜித் ஸம்வத்ஸரம் அதிகச்ராவணமு- | No. 4 |
| புஸ்தகம் 20 | 1—8—'47 சுக்கிரவாரம் | நெ. 4 |

ஸ்ரீ மத்வாசாரியாரின் பாஷியார்த்தத்தை அனுசரித்து

## ஸ்ரீபகவத்கீதா உபன்யாஸச் சுருக்கம்.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார் எழுதியது
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

### 2-வது அத்யாயம்.

(முன் 44-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜீவனுக்கு ஜனனமும் மரணமும் நியதமானதால் அவன் ஸ்வதந்திரன் என்று பின்னடி கூறப்பட்டதல்லவா? பின் யாரிடம் அந்த எண்ணத்தைக்கொள்ளவேண்டும் என்று கேட்டால், அதற்கும் இந்த சுலோகம் சமாதானம் அளிப்பதாய் ஆகும். ஆஸ்சர்ய: என்னும் பதம்ஸர்வஸ்வதந்திரனை குறிப்பிட்டதாய் ஆகும். கஸ்சித் அநேக ஆயிரக்கணக்கான ஜீவர்களில் ஸாத்விக ப்ரகிருதியுள்ள ஒருவன்தான் ஆஸ்சர்யவத் பச்யதி கஸ்சிதேனம் இந்த ஈசுவரனை ஆஸ்சர்யவத் ஆஸ்சர்யஸதிருசமாக ஸ்வதந்திர ஈசுவரனுக்கு ஸதிருசமாகக் காண்கிறான். அவனுக்கு ஸமானன் அவன்தான்; என்றால் அவனுக்கு ஸமானன் யாரும் இல்லை என்று ஏற்படுகிறது. "ககனம் ககனாகாரம் ஸாகர: ஸாகரோபம:| ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ" என்று

ஸ்ரீமத் ராமாயணத்திலும் "இந்துரிந்துரிவ ஸ்ரீமான்" என்று அலங்கார [illegible]ங்களிலும் சொல்லியிருப்பதுபோல் ஈசுவரனுக்கு ஸமானன் ஈசுவரனே; என்றால் ஈசுவரனுக்கு ஸமானன் வேறு யாருமில்லை என்று பொருள். ஆதலால் ஸாத்விகஜீவன் ஈசுவரனைத்தான் ஸ்வதந்திரன் என்றும் காண்கிறானேயன்றி இதரர்களைக் காண்பதில்லை என்று பொருள்படுகிறது. ஈசுவரனுக்கு ஸமானன் இல்லை என்று "ஏகமேவாத்விதியம்" என்னும் சுருதி அறிவிக்கிறது. அப்படியேத்தான் யாரோ ஒரு ஜீவன் ஸாத்விகன் இந்த ஈசுவரனை ஆஸ்சர்யவத் ஸதிருசன் இல்லாதவன் என்று சொல்கிறான். சிரவணம் செய்கிறான். யார் காண்கிறானோ சொல்கிறானோ, சிரவணம் செய்கிறானோ, அவனும் அந்த ஈசுவரனைக் கேட்டும் சொல்லியும் கண்டும் அவனை அறிவதில்லை. ஈசுவரன் அசிந்த்யாற்புத அபரிமிதவஸ்துவானதால் அவரை பூராவாய் அறிவதில்லை. யாரோ ஒருவன்தான் அறிவான் என்று சொன்னதைக்கொண்டு எல்லா ஜீவர்களுக்கும் ஈசுவரனுக்கு ஸ்வாதந்திரியம் உண்டு என்பதையும், ஜீவனுக்கு அஸ்வாதந்திரியம் என்பதையும், காண்பதில்லை, சொல்வதில்லை, கேட்பதில்லை என்று சொன்னதாய் ஏற்படுகிறது. அநேக ஜன்மங்களை எடுத்து அவைகளில் செய்த புண்யபரிபாகமுள்ளவன் யாரோ அவன்தான் அவ்வாறு காண்பான் என்று சொல்லப்பட்டிருப்பதாயும் பொருள்படும். "மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி ஸித்தயே" என்று முன்னாடி சொல்லப்படுகிறது "யததாமபிஸித்தானாம் கஸ்சின்மாம் வேத்திதத்வத ||" சிரவணாதிகள் செய்யப்பட்டாலும் ஈசுவரனுடைய யதாவத்தான க்ஞானம் ஸுலபமன்று என்று சொல்லப்படுகிறது "ப்ரம்மாதய: ஸுரகணா: முனயோத ஸாத்யா; [ஸத்வைததான மனஸ: வசஸாம்விதானே:] நாந்தம் பரஸ்ய பரதோப்யதனோ பியாந்தி கிம் தோஷ்டுமர்ஹதி ஸமே ஹரிருக்ரஜாதே:" என்று ஸ்ரீமத் பாகவதமும் அப்படியேத்தான் சொல்கிறது. ராஜஸர்களும் தாமஸர்களும் ஈசுவரனை சிரவணம் செய்தாலும் அறியமாட்டார்கள், ஸாத்விகர்கள்தான் அறிவார்கள். அவர்களிலும் எல்லோரும்





அறியமாட்டார்கள். கஸ்சித்ஏவ, ஒருவர்தான் அறிவார். அவரும் சம்பூர்ணமாய் அறியமாட்டார். சிறிதுதான் ஈசுவரனை அறிவார். இப்பேர்பட்டது ஈசுவரனுடைய மகிமை என்று சொல்லப்பட்டதாய் அறியப்படவேண்டும். (30) அதனால் நீ என்னசெய்யவேண்டும் என்று கேட்பாயோ, நீ துக்கப்படலாகாது. தேஹீநித்யம் அவத்யோயம் தேஹே. தேஹே நஷ்டேபி தேஹீ இந்த ஜீவன் சரீரம் நஷ்டமானாலும் தேஹீ ஸ்வரூப சரீரத்தைக்கொண்டவன் ஆவான் என்பது நித்யம் நிச்சயம். அதனால் அவன் ஸர்வஸ்ய அவத்ய: எல்லா வகையாலும் பிம்பத்தின் உபாதியோ அதன் சன்னதியோ இவைகளின் நாசமடைவது முதலான காரணங்களாலும் நாசமடையக்கூடியவன் அல்ல. அல்லது வேறுவிதமாயும் அர்த்தம்கொள்ளலாம். அயம் இந்த ஈசுவரன் ஸர்வஸ்ய எல்லா ப்ராணிகளின் தேஹே சரீரத்தில் ஸ்தூல சரீரம், லிங்க சரீரம், ஸ்வரூப சரீரம் இவைகளிலும் ஸம்ரக்ஷகராய் இருப்பதால், அதாவது பகவான் எங்கும் ஸம்ரக்ஷகராய் இருப்பதன் நிமித்தம் தேஹீநித்யம் அவத்ய: ஜீவன் எப்போதுமே நாசம் இல்லாதவனாய் இருக்கிறான். அவ்வாறேதான் "த்ரவ்யம் கர்மச காலஸ்சஸ்வபாவோ ஜீவ ஏவச| யதனுக்ரஹத ஸ்ஸந்தி நஸந்தியதுபேக்ஷயா" என்கிறது பாகவதம். 'தத்ர தத்ரஸ்திதோவிஷ்ணு: நித்யம் ரக்ஷதி நித்யதா" என்கிறது பாத்மபுராணம். ஸர்வஸ்ய ஸர்வத்ரவ்யாப்தியைக்கொண்டவராய் இருப்பதால் பகவான் ஸர்வர் எனப்படுகிறார். "ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ:" என்று முன்னாடி 11வது அத்யாயத்தில் சொல்லப்படுகிறது ஆதலால் ஸர்வஸ்ய தேஹே என்றால் பகவானுக்கு அதீனமான சரீரத்தில் என்று பொருள்படும். இப்பேர்பட்டதான சரீரத்தில் உள்ள இந்த ஜீவன் எப்போதுமே நாசம் இல்லாதவன் என்று சொன்னதாய் பொருள்படும்.' தஸ்மாத் ஸர்வாணிபூதானி ஆதலால் எல்லா ஜீவர்களைக் குறித்தும் ந த்வம் சோசிதும் அர்ஹஸி துக்கப்பட அருகன் ஆகமாட்டாய் பாரத பரதவம்சத்தில் உதித்தவன் ஆதலால் நீ இவ்வாறுதான் செய்ய அருகன். யுத்தம்செய் என்று

சொல்லாமல் துக்கப்படாதே என்று ஏன் சொல்லப்பட்டதென்றால் யுத்தம் தானாகவே ஆரம்பமாகிவிட்டது. அதற்கு தடையாய் சோகமோகங்கள் ஏற்பட்டதால் ப்ரதிபந்தகம் போய்விட்டால் வீரனும் தார்மிகனாயும் உள்ள நீ உன் தர்மமான யுத்தத்தில் பிரவிருத்திப்பாய் என்பதற்காக உன்னை சாக்கிட்டு இந்த இருபது சுலோகங்களால் தத்வோபதேசம் செய்யப்பட்டது.(31)மற்றொரு வகையாயும் உன்னை யுத்தம்செய்யச் செய்யச்சொல்கிறேன்கேள். ஸ்வதர்மம் அவேக்ஷ்ய க்ஷத்திரியனான உனக்கு யுத்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது உனக்கு ஸ்வதர்மம். உன்னைச் சேர்ந்த தர்மம். ஸ்வதந்திரராய் இருப்பதால் ஸ்வ என்னும் பதத்தால் சொல்லப்படுபவரான பகவானுடைய தர்மம். அவருடைய ப்ரீதியை உண்டுபண்ணும் தர்மம். அந்த காரணத்தாலும் அது உன்னுடையதேயான தர்மம் ஆகும். ஸ்வம் என்றால் பணம். பணத்தை சம்பாதித்துத்தரும் தர்மம். ராஜ்யத்தால் பணம் வருவதால் அது ஸ்வதர்மம் ஆகும். ஹிம்சாரூபமானதால் ஸு அதர்மம் மிகவும் அதர்மமானாலும் ஸ்வ உனக்கு விஹிதமான தர்மமாதலால் ஸ்வதர்மமாய் பகவானுக்கு ப்ரீதியைத் தரும் தர்மமாகும். அப்பேர்ப்பட்டதாயுள்ள தர்மத்தை புத்தியைக்கொண்டு யோசித்தாலும் நவிகம்பிதும் அர்ஹஸி. நடுக்கம் அடையவேண்டியதில்லை "வேபதுஸ்ச சரீரேமே" என்று நீ முன்னாடி சொன்னது சரியன்று அதனால் யுத்தத்தினின்றும் சலனமடைவதும் சரியன்று "ஏதான் நஹந்துமிச்சாமி, நயோத்ஸ்யே, கதம் பீஷ்மமஹம்" என்றெல்லாம் சொன்னது சரியன்று, ஆகையால் நீ யுத்தம் செய்யவேண்டியது தான் ஸ்வதர்மம். க்ஷத்திரியனான உனக்கு விஹிதமாயுள்ள யுத்தத்தினின்றும் ஓடாதிருப்பதான ஸ்வதர்மத்தை அறிந்துகொண்டு விகம்பிதும் யுத்தத்தைவிட்டு ஓட்டம்பிடிக்க ந அர்ஹஸி அருகன் ஆகமாட்டாய். "சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயனம்" என்று முன்னாடி சொல்லப்படுகிறது. யுத்தம் ஸ்வதர்மம் என்று அறிவதாலும் யுத்தத்தினின்றும் ஓடாதிருப்பது ஸ்வதர்மம் என்று அறிவதாலும் நீ யுத்தம் செய்யவேண்டியதுதான்.

(தொடரும்)





## ஸ்ரீ ருக்மணியின் கடிதம்.

(முன் 48-ம் பக்கம் தொடர்ச்சி)

சாஸ்திரம் அறிவிப்பதாவது;—சக்ஷு—: ப்ரீதிர் மனஸ்ஸங்க: ஸங்கல்போத ப்ரஜாகர:| க்ருசதா சாரதிரிலஜ்ஜா த்யாகோன்மாதஸ்ச மூர்ச்சனம்| சாமம் மரணம் சைவதசாவஸ்தா: ப்ரகீர்த்திதா:" என்று இதன்படி ருக்மணிதான் ஆசைப்படும் என்னை அடையமுடியாமற்போய் முதலாவது அவஸ்தை. பிறகு இரண்டாவது அவஸ்தை, பிறகு மூன்றாவது அவஸ்தை, இவ்வாறு ஆறு அவஸ்தைகளையும் அடைந்துவிட்டு அதையும் தாண்டி' ஏழாவது அவஸ்தையான லஜ்ஜாத்யாகம் என்பதையும், இப்போது அடைந்துவிட்டாள். கித்தம் அபத்ரபம்மே என்மனம் லஜ்ஜையைவிட்டுவிட்டது என்று ஸ்பஷ்டமாக எழுதிவிட்டாள். இந்த அவஸ்தையை அடைந்தும் இதிலும் என்னை இவள் அடையாமற்போனால் இதற்கடுத்த நிலையான பயித்தியம் ஆகிய உன்மாதாவஸ்தையையும் பிறகு மூர்ச்சையாகிய மூர்ச்சாவஸ்தையையும் பிறகு மரணத்தையும் அடுத்தடுத்து வெகு சீக்கிரத்திலேயே அடைந்துவிடக்கூடும் என்று நான் நினைக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் இந்த கடைசி மூன்று நிலைகளை அவள் அடைந்துவிடுவதற்குள் நான் அங்குபோய்விடவேண்டும்" என்று பகவான் சொல்லவும், பிராம்மணர் உடனே பயந்து எழுந்து சாஷ்டாங்கம் நமஸ்கரித்து, பெண் என்றால் பேயும் இரங்கும். தாங்கள் அவளிடம் உடனே கருணைகாட்டவேண்டும் என்று வேண்டினார். பகவான் அவ்வாறே செய்வதாய் ஒப்புக்கொண்டு, தன் ஸாரதியான தாருகனை கூப்பிட்டு, சைப்யம், ஸுக்ரீவம், மேக புஷ்பம், பலாஹகம் என்ற நான்கு வெள்ளைக் குதிரைகள் கட்டிய தன் கருடத்வஜரதம் வெளியே புறப்பட தயாராய்வரட்டும் என்று சொல்லிவிட்டு, தன் கையில் இருந்த ஸ்ரீ ருக்மணியின் கடிதத்தில் மேற்கொண்டு எழுதியிருக்கும் சுலோகங்களையும் வெகு அவலமாய் படித்துப்பார்த்தார். பிறகு அவள் அறிவித்திருப்பதாவது:—

कात्वामुकुन्द महती गुणशीलरूप
विद्यावयो द्रविणधामभिरात्मतुल्यं

व्रीडावती कुलवती नवृणीतकन्या
कालेनृसिंह नरलोक मनोभिरामं ॥ २ ॥

காத்வாமுகுந்த மஹதீகுணசிலரூப
வித்யாவயோத்ரவிணதாம ப்ராத்மதுல்யம்
வ்ரீடாவதீ குலவதீ நவ்ருணீதகன்யா
காலே ந்ருஸிம்ஹ நரலோகமனோபிராமம்.

கிருஷ்ணா! நான் வெட்கம்விட்டு உமக்கு இவ்வாறு எல்லாம் எழுதியிருக்கிறேனே! அதற்கு என்ன காரணம் என்று கேட்பீரோ! தங்களைத்தான் நான் மணக்கவேண்டும் என்பதுதான். தங்களை விட்டு வேறு யாரிடம் என்மனம் நாடும். என் மனம் மட்டில் அன்று, என் அந்தஸ்த்தில்உள்ள வேறு யாருடைய மனமும் இவ்வாறுதான் செல்லும். அதனால் என்மீதுமட்டில் தாங்கள் குறைகூறவேண்டாம். தாம் எப்படி இருக்கிறீர் என்றால், குலம், சீலம், ரூபம், வித்யை, வயது, செல்வம், ப்ரபாவம் இவைகளால் தமக்கு சமானர்தாம்தான். இணையற்றவர். "பும்ஸாம்மோஹனரூபாய" என்று நரலோகத்தின், ஆண்பிள்ளைகளின், மனதையும் கவரச்செய்பவர். பின் பெண்களின் மனதையும் கவருபவர் என்று சொல்லவும்வேண்டுமோ? தாம் மனுஷ்யனாய் அவதரித்திருப்பதால் மனுஷ்யர்களின் மனதுக்கும், இப்பேர்ப்பட்ட மகாபுருஷர் எங்களில் ஒருவராய் அவதரித்திருக்கிறாரே என்று பரம திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அப்பேர்பட்டவரான தம்மை ஸத்குலத்தில் பிறந்தவளாயும் சுவேச்சையாய் போக விருப்பமில்லாமல் நாணம் மட்டு மரியாதை முதலான பெண்களுக்கு உரித்ததான அடக்க ஒடுக்கங்களைக் கொண்டவளாயுமுள்ள விவாக வயது அடைந்த ஓர் பெண் எப்படி தன் பர்த்தாவாக வரிக்காமல் இருப்பாள்? தாம் நரசிம்ஹர். புருஷ ச்ரேஷ்டராய் இருப்பதால் விவாகம் நடந்தேறும்தருவாயில் தம்மை வரிக்கிறேன். காலத்தில் சமயத்தில் தாம் கைவிடுபவரல்ல. காலேந்ருஸிம்ஹ சரியான சந்தர்பத்தில், ப்ரஹ்லாதன் கொல்லப்படும் சந்தர்ப்பத்தில் தாம் நரசிம்ஹ மூர்த்தியாய் அவதாரமெடுத்த ப்ரபு. என்னையும் இந்த காலத்தில் விவாகமாகப்போகும் சந்தர்ப்பத்தில் கைவிடாமல் காப்பாற்றுவீர் என்று நம்பியிருக்கிறேன்.



सत्वं मयाप्यपिवृतः पतिरिंदिरायाः
भक्तप्रीयः कृपणलोक शरण्य ईशः ।
मत्वैतदंग तव पादसरोजदास्याः
कामं कुरुप्रियतम प्रणतास्मितेंघ्रिं ॥ ३ ॥

ஸத்வம் மயாப்யபிவ்ருத: பதிரிந்திராயா:
பக்தப்ரிய: க்ருபணலோக சரண்ய ஈச:।
மத்வைததங்க தவபாதஸரோஜதாஸ்யா:
காமம் குருப்ரியதம ப்ரணதாஸ்மி தேங்க்ரிம்॥

ஆதலால்தான் உம்மை பதியாக நான் வரித்திருக்கிறேன். தாங்கள் லக்ஷ்மீபதி. அதனால் ஸ்திரீஜாதிக்கு பதிவிடத்தில் எவ்வளவு ப்ரேமையும் பக்தியும் இருக்கும் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர். லக்ஷ்மிதானே தேவர்களின் நடுவில் க்ஷீர ஸமுத்ரக்கரையில் சுயம்வரத்தில் தங்களை பதியாக வரித்தாள். தாங்கள் அவளிடம் கருணைகொண்டு அவளுடைய அந்தரங்க பக்தியை மெச்சி அவளை பாரியையாக வரித்திருக்கிறீர் அந்த மகாலட்சுமியேதான் நான் இந்த அவதாரத்தில் தங்களுக்கு தொண்டுபுரிய ருக்மணியாக வந்திருக்கிறேன். ஆதலால் தாங்கள் முன்னமேயே எனக்குக்லிப்தமான பர்த்தாவானவர். லட்சுமீபதியானதால் தாங்கள் அளவற்ற ஸம்பத்துக்கள் நிறைந்தவர். அதனாலும் நான் தங்களிடம் ஆசைகொள்கிறேன். அதனால் தங்களுக்கு ஐசுவரிய மதம் முதலானது இல்லை பக்தர்களிடம் இளகியமனதுடையவர். பக்தர்களையே பிரியர்களாய் நண்பர்களாயக்கொண்டவர். பக்தி ஒன்றே தம்மை ப்ரியசாகச் செய்துகொள்ளும். யார்யார் வருந்துகின்றனரோ, ஸங்கடங்களில் சிக்கியவர்களோ, அவர்கள் எல்லோருமே தங்களைத்தான் சரணமாக நாடுகின்றனர். இதர தேவர்களை நாடினாலும் அந்த தேவர்கள் அவர்களை கஷ்டங்களினின்றும் உத்தரிக்க இயலமாட்டார்கள். ஏனெனில் தாங்கள்தான் ஈசுவரர். சராசர ப்ரபஞ்சமனைத்துக்கும், லக்ஷ்மீ பிரமாதி ஸமஸ்த தேவர்களுக்கும் அதிபதி இந்த எல்லா ப்ரமேயங்களை எல்லாம் நான் நன்கு அறிந்து தாங்கள் தான் ஸர்வோத்

தமமான தெய்வம் என்று முடிவுக்குவந்து தங்கள் திருவடிகளுக்குத்தான் தாஸியாய் அமர நான் முன்வந்திருக்கிறேன். என் பரிசயம் தாங்கள் என் ஊருக்கு வந்து ஏற்பட்டிருப்பதால் தாங்கள் எனக்கு நண்பராய் ஆனவர். அந்த சுவாதீனம் வைத்துக்கொண்டும் தங்களுக்கு இந்த விக்ஞாபனத்தை செய்து கொள்ள தங்களை அனுகி இருக்கிறேன். நான் தங்கள் திருவடி ஸேவகியாய் ஆகிவிட்டேன். ஆத்மாராமரான தங்களுக்கு பெண் பொன் மண் ஆசை இல்லாதிருந்தாலும், எதினாலும் யாதும் ஆகவேண்டியதில்லையானாலும், நான் தங்களுக்கு ஸேவகியாயிருக்க மிகவும் ஆசைப்படுகிறேன். அதனால் எனக்கு உலகில் தம்மைவிட ப்ரியமான வஸ்துயாதொன்றும் இல்லை. தம் ஒருவருடைய க்ஞாபகமே மேலிட்டிருக்கிறது. தாம்தான் எனக்கு சரணம். தம் பாதகமலங்களில் பணிந்துவிட்டேன். நான் எழுந்து வேறுஎனதையும் கண்ணெடுத்தும் பாரேன். தாம்தான் எனக்கு ப்ரியதமர். ஆதலால் என்னை கைபிடித்தாலும் சரி கைவிட்டாலும் சரி உங்கள்பாடு. காமம் குரு உமது இஷ்டம். உமக்குத்தோன்றியதைச் செய்யலாம். நான் உம்முடைய பாதகமலங்களில் பணிந்து கிடந்திருப்பதை கைவிடுபவள் அல்ல.

तन्मे भवान्खलुवृतः पतिरंगजायां
आत्मार्पितश्च भवतोत्र विभो विधेहि ।
मा वीरभागमभिमर्शतु चैद्य आरात्
गोमायुवन्मृगपतेः बलिमंबुजाक्ष ॥ ४ ॥

தன்மேபவான்கலுபவான்ருத: பதிரங்கஜாயாம்
ஆத்மார்ப்பிதஸ்ச பாவதோத்ரவிபோ விதேஹி
மாவீரபாகம பிமர்சது சைத்ய ஆராத்
கோமாயுவன் ம்ருகபதே: பலிமம்புஜாக்ஷ

ஹே ப்ரபோ! நான் மிகவும் தாழ்மையாய் விக்ஞாபனம் செய்துகொள்கிறேன் கேளும். நான் தங்களை பதியாக வரித்ததற்கு காரணங்களை மேலே தெளிவாய்ச் சொல்லிவிட்டேன்.

(தொடரும்)

## ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகள் இயற்றிய ஸரஸபாரதி
### 11-வது வியாஸம்.

(முன் 51-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமந் நாராயணனுக்கு கர்த்தும் அகர்த்தும் அன்யதா கர்த்தும் அதாவது ஒன்றைச் செய்யவோ செய்யாதிருக்கவோ அதை மாறாய் செய்யவோ முடியும் என்பது அறிந்துகொள்ள வேண்டியதாகும். பலிஷ்டனான ஒருவன் துர்பலனான ஒருவனைப் பிடித்து ஓர் காரியத்தை வெட்டியாய்ச் செய்யும்படி மேற்பார்வை பார்த்திருந்தால்; அந்த துர்பலன் அந்த காரியத்தைச் செய்யாமல் இருப்பானா? செய்யாமல் இருக்கமுடியுமா என்ன! யோசித்துப்பார். ஏனெனில் அந்த துர்பலன் ஸ்வதந்திரனாய் இல்லாமல் இருப்பதால் அந்த காரியத்தைச் அகர்த்தும் செய்யாமல் இருப்பதற்கு முடிவதில்லை. அதுபோல் ஈசுவரன் ஸ்வதந்திரன். அஸ்வதந்திரன் அல்ல. ஆதலால் ஓர் காரியத்தை அகர்த்தும் செய்யாமல் இருப்பதற்கும் முடிந்தவன். அவ்வாறு ஒன்றைச் செய்யாமல் நின்றுவிடுவதற்கு சக்தி இருப்பது என்பது ஓர் குணமே ஆகும். அது விஷ்ணுவுக்கு இருக்கும் மகத்தான குணம். அது அவருக்கு இருக்கும் மகத்தான சக்தியைக் காட்டுகிறது. ஒன்றைச் செய்யாமல் நின்றுவிடுவது ஒருவருடைய சாமர்த்தியத்தைக்காட்டுமா என்றும், ஓர் சிசு ஒன்றையும் செய்வதில்லை; இளைத்துப் போன கிழடுதட்டிய ஓர் மாடு ஒன்றையும் செய்வதில்லை; அதனால் அகர்த்தும் சக்தி ஸ்ரீ ஹரிக்கு ஓர் குணம் ஆகுமா என்று மந்தபுத்தியுள்ளவர்களுக்கு சந்தேகம் வரும், அது நிரசிக்கத்தகுந்ததேயாகும். ஏனெனில் அயோக்யர்கள் அநர்ஹர்கள் எவ்வளவோபேர் எவ்வளவோ மகத்தான எத்தனங்களை முக்தியடைவதற்காகச் செய்கின்றனர். அப்படிச் செய்தும் அவர்கள் அதை அடையாதபடி பகவான் செய்துவிடுகிறார். அதனால் ஸ்ரீ ஹரிக்கு அகர்த்தும் ஒன்றை செய்யாமல் செய்துவிட ஸாமர்த்தியம் இருப்பதாய் ஏற்படுகிறதல்லவா? ஆதலால் ஹரிக்குத்தான் அகர்த்தும் செய்யாமல் இருக்கும் சக்தி உண்டு. அவருக்குத்தான் ஸ்வாதந்திரியம் உண்டு. இதா

தேவர்கள் யாருக்குமே இல்லை. அவர்களுக்கு ஸ்வாதந்திரியம் இருந்தால் அவர்களால் வரன்பெற்றவர்களிடமிருந்து கடைசியில் அவர்கள் தப்பிப் பிழைக்க எத்தனிப்பார்களா என்ன? தங்களுக்கே கடைசியில் கெடுதி செய்பவர்களான அஸுரர்களுக்கு ஆதியில் இதரதேவர்கள் அவர்கள் கேட்ட வரன்களைக்கொடுத்து விடுகின்றனர். ஹிரண்யாக்ஷன் பஸ்மாஸுரன் முதலானவர்களுக்கு பிரம்மருத்திராதி தேவர்கள் வரன்களைக் கொடுத்துவிட்டு அவைகளை அகர்த்தும் தன் விஷயத்தில் பயன்படாதிருக்கச் செய்ய அந்த தேவர்களுக்கு சக்தி இல்லாமல் போய்விட்டது. மேலே சொன்ன ரீதியில் விஷ்ணுவுக்குத்தான் அந்த சக்தி இருந்தது. ஆதலால் அகர்த்தும் அந்த ஸ்ரீ ஹரிதான் ஸமர்த்தர். அன்யதாகர்த்தும் ஒன்றை மாற்றவும் ஸ்ரீ ஹரிதான் சக்திவாய்ந்தவர். பிரம்ம ருத்திராதி இதர தேவர்கள் ஒருவராலும் கொல்லப்படாதிருக்கும் வரன்களை இதர்களுக்கு ஹிரண்யாக்ஷாதிகளுக்கு கொடுத்துவிடுகின்றனர். ஸ்ரீ ஹரி அந்த வரன்களை அன்யதாவாய் மாற்றிவிட்டு அவர்கள் கொல்லப்படச்செய்துவிடுகிறார். அவர்களைத்தாமே கொல்கிறார். தனக்கு ஊட்டவந்த ஸ்தனத்திலுள்ள விஷத்தை பூதனை என்னும் ராக்ஷஸியிடம் அமிர்தமாகச்செய்து, அதை பானம் செய்ததால் பிரளயகாலத்தில் பகவான் குழந்தை பருவத்துடன் வடபத்ரசாயியாய் ஆலிலைமேல் பள்ளிகொண்டார். அந்த குழந்தை வயிற்றினில் சராசர பிரபஞ்சங்கள் கொண்ட இந்த பதினாங்கு லோகங்களும் அடங்கிக் கிடக்கும்படிச் செய்தார். எல்லோராலும் மீறமுடியாமற்போன பலவகையான ஹிரண்யகசிபுவுக்கு அளித்திருந்த வரன்களை நரஸிம்ஹ ரூபத்துடன் மகாபலிஷ்டசாலியாய் அன்யதாவாய் மாற்றி அவனை ஸம்ஹரித்தார். ஆகையால் ஒன்றை அன்யதாகர்த்தும் இந்த ஸ்ரீ ஹரிதான் ஸமர்த்தரேயன்றி வேறு எந்த தேவரும் சக்தராகமாட்டார்.

பரமசிவன் விஷத்தைப் பானம் செய்யப்போய் அந்த விஷம் கழுத்திலேயே தங்கிப்போய் தலைவலி முதலான ஹிம்சைகள் உண்டாகி ஸ்படிகம்போன்ற அழகிய கழுத்து கருத்துப்போய் நீலகண்டர் ஆனார். பஸ்மாஸுராதிகளுக்குத் தகாத வரன்களைக்



கொடுத்துவிட்டு பின் அவரே ஸங்கடமடைந்தார். சதுர்முகனும் ஹிரண்யகசிபு முதலானவர்கள் செய்த தபஸ்ஸின் பராக்கிரமத்தையும் தான் கொடுத்த வர ப்ரபாவத்தையும் அன்யதாவாய்ச் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டார். மகேந்திரன் விருத்ராஸுரனைக் கொன்றுவிட்டு அதனால் ஏற்பட்ட பிரம்மஹத்யை இவனைக் கைப்பற்ற ஓடிவரவும் அந்த பிரம்மஹத்யைக்கு பயந்து மானஸஸரோவரத்திலுள்ள அநேகத் தாமரை புஷ்பங்களில் ஓர் தாமரையின் ஜலத்தில் அமிழ்ந்துகிடந்த ஓர் தண்டின் அநேக நூல்களில் ஓர் நூலில் சூக்ஷ்மரூபத்துடன் ஆயிரக்கணக்கான வருஷங்கள் பதுங்கிக் கிடந்தான். என்றால் இப்பேர்ப்பட்ட ஒன்றை மாற்றிவிட அன்யதாகர்த்தும் சக்தி இதரதேவர்களுக்கு இருப்பதாய் எப்படி ஏற்படும்? இதரர்களுக்கு அன்யதாகர்த்தும் சக்தி ஏது? அதைச்சொல். வேறு ஒருவருக்கும் இல்லை. ஆகலால் ஹரிக்குத்தான் அன்யதாகர்த்தும் சக்தி உண்டு. அவருக்குத்தான் கர்த்தும் சக்தியும் உண்டு. அதாவது ஒன்றைச் செய்யவும் சக்திஉண்டு. இந்த ஜகத்தை எல்லாம் அவர் விளையாட்டாகவே நிர்மாணம் செய்துவிடுகிறார். விளையாட்டாகவே அவர் தரிக்கிறார். தான் எல்லாவற்றிற்கும் ஸர்வஸாக்ஷியாய் இருந்து தன் கண்ணாலேயே மேற்பார்வை பார்த்துக்கொண்டு ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் எல்லாம் சேர்ந்த உலகத்தை எல்லாம் அந்தந்த காரியங்களைச்செய்யும்படி நியமனம் செய்து வருகிறார். ஜயவிஜயாதி பக்த ஸமூகம் அபராதங்களைச் செய்தபோதிலும் அவைகளை பொருட்படுத்தாமல் கருணா ஸமுத்திரரான அந்த ஸ்ரீ ஹரி அவர்களை நித்யமுத்தர்களாய்ச் செய்துவிடுகிறார். அயோக்யர்களான தைத்யஸமூகங்களை கிருதயுகாதிகளில் அடிக்கடி அவதாரம் செய்துகொன்று வருகிறார். அந்த ஸ்ரீ ஹரிதான் எல்லோர் ஹிருதயகமலத்தில் புருஷரூபத்துடன் இருந்துகொண்டு எல்லோரையும் ப்ரேரிபிக்கிறார். ஸ்ரீ ஹரிக்கு சிந்தை என்பது இல்லை. ஸந்தாபம் என்பது இல்லை." (தொடரும்)

---

அடுத்த இதழில் இந்த ஸரஸபாரதி முடிவடையும். பின் ஸ்ரீமத்வபாஷ்யானுஸாரமாய் ஸ்ரீமத் பாகவதம் சம்பூர்ணம் அறிவிக்கப்படும். ப-ர்.

# ஆலய பஹிஷ்காரத்திற்கு ஆக்ஷேபணைகள்.

(முன் 57-ம் பக்கம் தொடர்ச்சி)

இதனால் 4-வது பிரசினத்திற்கும் சுலபமாய் சமாதானம் ஏற்படும். பகவான் சர்வ வல்லமை படைத்தவர்தான். அந்யஜனுடைய பாபத்தைப்போக்கும் சக்திமான்தான்: ஆனால் ஆலயஸ்தவிக்ரஹங்களில் பகவான் சன்னிதானம் பெற்றிருக்க, அவரே சுயம் ஏற்படுத்திக்கொடுத்து உலகத்தாருக்கு பகிரங்கப்படுத்திவிட்ட ஆகமவிதிகளுக்கு முரணாக அவர் நடத்திக்கொடுக்க வேண்டிய அவசியமென்ன? அந்த்யஜனுடைய திருஷ்டிபாதத்தை வேறு எந்தவழியிலாவது மாற்றி தனக்கு ஏன் ஏறபடச்செய்துகொள்ளவேண்டும்? அவர் மனுஷ்யர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்த விதிகளை அவரே மனுஷ்யனாய் அவதரித்தபொழுது அவைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து, இதரர்களை எச்சமயத்திலும் அவைகளுக்கு மீறி நடக்காமல் அனுஷ்டிக்கும்படி செய்வது அவருடைய இயல்பு, இச்சை. ஸ்ரீராமராய் அவதரித்தபொழுது ஸர்வசக்தராயினும் பித்ருவாக்ய பரிபாலனம் செய்து பலவகை கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்ததும், விதிகளுக்கு கட்டுப்படாதிருப்பவராயினும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் செய்தபோது தேவபூஜை தீர்த்தயாத்திரை முதலானவைகளைச் செய்து விதிகளுக்கு கட்டுப்பட்டு வந்ததும் கவனிக்கத்தக்கது. பக்தர்களுக்காக பகவான் சிற்சில சமயங்களில் விதிகளை மீறுவதாக இதிகாசங்கள் காணப்படுகிறதே என்றால், அவர் நடக்கலாமேயன்றி, அவருடைய பக்தர்கள் விதிநிஷேதங்களுக்கு கட்டுப்பட்டு நடந்துவந்துதான் பகவத்ப்ரீதியை சம்பாதித்திருப்பார்கள். அந்த பக்தர்கள் ஒருக்காலும் விதிகளை மீறி இருக்கமாட்டார்கள். ஓர் அந்த்யஜ பக்தனுக்காக பகவான் விதியை மீறலாமே என்றால், அந்த அந்த்யஜ பக்தன் சுயம் சுருதிஸ்மிருதி ஆகம விதிகளை மீறி நடந்து பகவத் ப்ரீதியை சம்பாதித்திருக்கமாட்டான். அப்படி அவைகளை மீறி நடந்தான் என்றால் அவனிடம் பகவத் ப்ரீதியும் ஏற்படாது. அந்த அந்த்யஜ பக்தன் தன்னை தேவாலயங்களில் புகலாகாது என்று தடுத்திருக்கும் சட்டத்தை ஒருக்காலும் மீற மாட்டான். ராஜசபைக்குள் புகலாகாதென்று தடுத்திருக்கும்



சட்டத்தை ஸ்ரீ ராமசந்திரனுடைய ராஜ்யபார காலத்தில் ஓர் நாய்கூட மீறி நடக்கவில்லை என்று ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்திலிருந்து ஸ்பஷ்டமாய் வெளியாகிறது. அந்த்யஜபக்தனான நந்தன் சிதம்பரம் நடராஜனின் கோயிலில் புகுந்துவிட அபிப்ராயப்படவில்லை. கோபுர தரிசனமே தன் பாபவிமோசனம் என்று எண்ணினான். பக்தியை வளர்த்தான். அவனிடம் தன் சரீரத்தை ஸமர்ப்பித்துவிட தன் சண்டாள ஜன்மம் குறுக்கிடுவதாய் நிச்சயித்து அக்னிப்ரவேசம் செய்து அந்த தன் சண்டாள சரீரத்தை பஸ்மமாக்கிக்கொண்டான். சிவலீலா மகாத்மியத்தில் ச்வோகர்தா என்னும் திருநாளைப்போவாராகிய நந்தனின் சரித்திரத்தில் இது ஸ்பஷ்டம். கோபாலகிருஷ்ண பாரதி தன் பிரசித்தமான நந்தனார் பாட்டுகளில் இதை நன்றாய் வெளியாக்கியுள்ளார். பவிஷ்யோத்தர புராணம் வெங்கடேச மாகாத்மியத்தில் வெங்கடாத்ரி என்னும் பெயர் ஏற்பட்டதற்கு காரணமாய் சொன்ன இதிஹாஸம் சண்டாளனுடைய பாபத்தைப்போக்கி ஆலயஸ்த பகவான் அவனுக்கு தரிசனமளிக்கக்கூடும் என்பது பிரசினத்தில் ஆதாரமாய் காட்டப்பட்டிருக்கிறது. ஓர் சண்டாளன் ஸ்ரீ வெங்கடரமணனைப் பார்க்க இச்சைப்பட்டு வரவும், அவனுடைய மலையை அணுகியதும் அவனுடைய சரீரத்திலுள்ள பாபங்களெல்லாம் கொந்தளித்து, வாந்திவந்து, பிறகு அவனுக்கு பகவத்தரிசனம் ஏற்பட்டதும் உண்மைதான். பகவான் சண்டாளனுடைய பாபத்தை பரிகரித்துவிட்டு அவனை தன் கோயிலுக்குள் புகுத்திவிட ஏற்பாடு செய்யவில்லை. அந்த நபர் சண்டாளன் அல்ல. அவன் ஓர் பிராம்மணன் மாதவன் என்ற பெயர் கொண்டவன். விதிவசத்தால் அவன் ஓர் சண்டாள ஸ்திரீயை காதலித்து அவள் மோகவலையில் சிக்கி, துச்சமான அவளுடைய ஸம்போக சுகத்திற்காக அவளுடன் சண்டாள விருத்தியைக்கொண்டிருந்தான். அவன் பச்சாதாபமடைந்து பகவத்தரிசனம் செய்ய அந்தரங்க பக்தியுடன் பகவானை ப்ரார்த்திக்கவும் அவனுடைய சரீரத்தில் கலந்திருந்த சண்டாள ஸம்பர்க்க பாபம் ஓர் துளிகூட இல்லாமல், வாந்திரூபமாக அதை வெளிவரச்செய்துவிட்டு, அவனுடைய இயற்கையான

பிரம்மதேஜஸ் ஏற்படச்செய்துவிட்டு, அவனை தன் கோயிலுக்குள் பிரவேசிக்கச்செய்ததாய்தான் நாம் அர்த்தம் கொள்ளவேண்டும். ஆதலால் இந்த இதிஹாஸமும் ஆலயப்ரவேசத்திற்கு சிறிதும் ஆதரவு அளிக்காது.

5-வது பிரசினத்தில் பகவானுடைய ப்ரேரணையின்படித் தானே காங்கிரஸ்காரர்கள் இந்த சட்டத்தை இயற்றியிருக்க வேண்டும்? ஏன் அந்த ப்ரேரணையை நாம் மானனம் செய்யலாகாதென்று கேட்கப்படுகிறது. சுருதிஸ்மிருத்யாதிகளுக்கு அனுசரணையாக செய்யப்பட்ட கர்மாக்களைத்தான் நாம் மானனம்செய்ய வேண்டும். அவைகளுக்கு விருத்தமாய் செய்யப்பட்ட கர்மாக்களை நாம் திக்கரிக்கவேண்டும். பகவத் ப்ரேரணை என்பது அந்தந்த நபர்களின் யோக்யதை கர்மா யத்தினம் இவைகளுக்குத் தகுந்தபடித்தான் ஏற்படுகிறதேயன்றி எல்லோருக்கும் ஒரே ரீதியில் ஏற்படுகிறதில்லை. பாபிஷ்டனுக்கு பாபகர்மாவைச் செய்து நரகத்தில் விழுந்து பாபபலனை அனுபவிக்க பகவான் பிரேரிக்கிறார். க்ஞானேந்திரியம் படைத்து பகுத்தறிவுள்ள புத்திமான் அவன் செய்யும் காரியங்கள் சாஸ்திரத்துக்கு விருத்தமாய் இருந்தால், அவைகள் பாபகரமான காரியங்கள் என்று நிச்சயித்து, அவைகளை விலக்கிவிடவேண்டும். காரியங்களைச் செய்யவும் செய்யாதிருக்கவும் இவனுக்கு அம்மட்டில் ஸ்வாதந்திரியம் உண்டு. தத்தஸ்வாதந்திரியம் என்று நம்மவர்கள் அதை நிரூபித்திருக்கின்றனர். அப்படி இந்த ஜீவனுக்கு எந்த வகை ஸ்வாதந்தரியமும் இல்லாமல் கேவலம் ஈசுவரன் எதை ப்ரேரிக்கிறானோ அதைத்தான் இவன் செய்பவனாய் இருந்தால், உலகில் இன்னது செய்யவேண்டும், இன்னது செய்யலாகாது என்று விதி, நிஷேத சாஸ்திரங்கள் எண்ணிறைந்தவைகள் ஏன் ஏற்படுத்திருக்கப்படவேண்டும்? பகவான் அவைகளை எல்லாம் ஏன் பிரகடனம் செய்திருக்கவேண்டும்? அவருடைய ப்ரேரணையால்தான் எல்லாவற்றையுமே எல்லோரும் செய்வதாய் இருந்தால் ஒருவனை புண்யகாரியங்களைச் செய்ய ப்ரேரித்து புண்ய பலனான ஸ்வர்க்காதிலோகங்களை ஏன் அவர் அனுபவிக்கச்செய்ய வேண்டும்? மற்றொருவனை பாபகாரியங்களைச் செய்யச்செய்து கும்பீபாகாதி நரகங்களில் யமதூதர்களால் சொல்லவொண்ணா



நரகவேதனையை அனுபவிக்கச் செய்யவேண்டும்? பகவானுக்கு இதனால் பக்ஷபாதம் கருணை இல்லாமை முதலான தோஷங்கள் இருப்பதாய் ஏற்படுமல்லவா? இத்யாதி காரணங்களால் பகவான் தன்மீது எந்த பழியையும் சுமத்திக்கொள்ள இச்சைப்படாமல் ஒருவனை ஓர் காரியத்தில் ப்ரேரிக்கச்செய்யும் பொழுது மூன்று விஷயங்களை யோசித்து அதன்படித்தான் அவனை ப்ரேரிக்கிறார். ஒன்று அந்தந்த நபரின் இயற்கையான யோக்யதை. அதற்கு ஹடம் என்றுபெயர் உண்டு. இரண்டாவது செய்யப்படும் கர்மா. மூன்றாவது அவனுடைய ப்ரயத்தினம். ஒருவன் சாஸ்திரவிமரிசனம் செய்து அதன்படி சரியான ப்ரயத்னம் எடுத்தால் நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன. நல்லகாரியங்களைச் செய்வதால் அவனுடைய யோக்யதையும் விருத்தியாகிறது. பகவான் பிறகு இதற்கு நல்ல பலனை அளிக்கிறார். ஆதலால் நாம் சுயம் ப்ரயத்தினம் செய்யவேண்டியது அவசியம். பகவான் இருக்கிறார் என்று சும்மா இருந்துவிடலாகாது. எது செய்யலாம் எது செய்யக்கூடாது என்று அறிய நாம் தான் எத்தனிக்கவேண்டும், அந்த எத்தனம் மாறாய் இருந்தால் நமக்கு சிக்ஷை உண்டு. "விஞயத்னம் ஹடோ நாபிகர்ம பலப்ரதோ வாஸனாதேவோகிலஸ்ப] ஸ்வாதந்தர்யசக்தே: ।வினியாமகோஹிந்தாப்யேதான் ஸோப்யபேக்ஷயைவ யுஞ்ஜேத்" புருஷ ப்ரயத்னம், கர்மா, யோக்யதை இம் மூன்றையும் பொருத்துதான் பகவான் ப்ரேரிக்கிறார் என்று ஸ்பஷ்டமாக வரையப்பட்டிருக்கிறது. இதுதான் ஹடவாதம் என்று பீமசேனரும் துரௌபதியும் யுதிஷ்டிரருக்கு எடுத்துச் சொல்லியுள்ளது. இவ்வாறு ஆலய ப்ரவேசாதிகள் நடக்க பகவத் ஸங்கல்பமில்லாமல் நடக்குமா, அதை ஏன் மீறவேண்டும் என்றும் பிசினத்தில் கேட்கப்படுகிறது. பகவத் ஸங்கல்பம் யாது என்பதை நாம் இதற்குள் எப்படி நிச்சயித்துவிடமுடியும்? சநாதனிகள் ஏகோபித்து யத்தனித்தால் இதை மாறச் செய்யலாம் என்று பகவத் ஸங்கல்பம் இருக்கலாம். பகவத்ஸங்கல்பத்தால்தான் சநாதனிகள், லக்ஷக்கணக்கானவர்கள் பிராம்மணர்கள் பிராம்[illegible]கள் பாகுபடியன்னியில் இத் தென்னாட்டில் [illegible] எல்லா [illegible]ளுமே, தாமாக எந்த பலமான [illegible]மன்னியில சண்டாளர்கள்

210390.

பிரவேசித்த தேவாலயங்களை பஹிஷ்கரித்திருக்கின்றனர். இவ்வருடம் காஞ்சிகருடோற்சவம் இதற்கு அத்தாக்ஷி. ஸ்ரீமான் காந்தியும் கூட இதை ஸ்பஷ்டமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். பகவதஸங்கல்பத்தால் அக்கோயில்களில் தற்போது பூஜைசெய்துவரும் சிவ விஷ்ணு தீக்ஷைபெற்ற அர்ச்சகர்களும் அவர்களின் சாப்பாட்டுக்கு வேறுவழிஏற்பட்டு, அவர்களில் ஒற்றுமை ஏற்பட்டு, ஏகமனதாய் அக்கோயில்களுக்குள் புகாமல், பூஜைசெய்வதை இனிமேல் நிறுத்திவிட்டால், காங்கிரஸ் கொள்கைகளை ஆதரிக்கும் சீர்திருத்தவாதிகள்தான் பூஜைசெய்யப்புகுந்து, அந்த பூஜையை இதரர்கள் ஒப்புக்கொள்ளாமல், ஸ்வல்ப ஹலகலகம் வந்து, ஆலய பஹிஷ்காரம் ஜனங்களில் வலுத்துப்போகும். அரசாங்கம் தானாக ஜனங்களின் இச்சைப்படி நடக்க வந்துசேரும். அரசாங்கத்தின் மனப்பான்மை பகவத் ஸங்கல்பத்தால் மாறாது என்று சொல்லமுடியாது. "யத்ரயத்ர த்விஜாகாவ: வேதாவர்ணாசிரமக்ரியா:| தம் தம் ஜனபதம் யாதஸந்தீபயத வ்ருஸ்ச்யத" என்று சொன்னபடி பிராம்மணர்களைக் கொல்லுங்கள், பசுக்களைவெட்டுங்கள், பார்ப்பனீயத்தை, வர்ணாசிரமாசாரங்களை அனுஷ்டிக்கும் வைதீகத்தை, அழியச்செய்யுங்கள். இவைகள் காணப்படும் ஊர்களையே நெருப்புவைத்து பொசுக்குங்கள் என்று கடுமையாய் ஆக்ஞைபிறப்பித்திருந்த ஹிரண்யனின் அரசாங்கமும் "நயஷ்டவ்யம் நஹோதவ்யம் நதாதவ்யம் குத ஸ்சன" தன் நாட்டில் ஒருவரும் யக்ஞம் தேவபூஜை முதலான வைதிக கார்யங்களைச் செய்யலாகாது, வேதமந்திரமே காதிற்படலாகாது, எந்த வைதிக கர்மாவும் நடைபெறலாகாது என்று ஆக்ஞை பிறப்பித்திருந்த வேனனுடைய அரசாங்கமும் காலசக்ரத்துக்கு உட்பட்டு பலவருஷங்களுக்கு பிறப்பட்டாவது அபிப்பிராயமாறுதலை அடையவில்லையா? ஆதலால் பகவத் ஸங்கல்பம் இதுதான் என்று நிச்சயித்து அதை நடைபெறச் செய்யவேண்டும் என்று வாதிக்க இடமில்லை. சாஸ்திர விருத்தமான காரியங்களை எப்பவும் நடைபெறச் செய்யலாகாது. பவிஷ்யத்புராணாதிகளில் இவ்வகை அதிக்ரமங்கள் நடைபெறப் போவதாய் சொன்னகாலமும் இதுவன்று. கலியுகத்தின் அந்தத்தில் தான் இவ்வகை அதிக்ரமங்கள் நிலைநிற்ககூடும். அச்சமயத்திலேயும் காவேரி, தாம்பரபர்ணி, க்ருதமாலா முதலான புண்ய



நதிகளின் கரையில் இத்தென்னாட்டில்மட்டில் தர்மங்கள் புண்யகர்மாக்கள் தழைத்து நிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சநாதனதர்மத்தில் பற்றுள்ளவர்கள் யாவரும் ஏகோபித்து எமது சாஸ்திரங்களில் சம்பூர்ணமாய் நம்பிக்கையை வைத்து சாஸ்திரசம்மதமாய் நடைபெறச்செய்யும் காரியங்களுக்கு ஆதரவு அளிப்பதையும்; சாஸ்திரவிருத்தமாய் நடைபெறும் சண்டாளர்களின் ஆலய ப்ரவேசாதி துஷ்காரியங்களை பஹிஷ்கரிப்பதையும் கைக்கொள்ள வேண்டிய தவசியம்.

இனி வேறு பிரசினத்தை எடுத்துக்கொள்வோம். இது மிகவும் முக்யமான பிரசினை. இதில் யாவரும் கவனம்செலுத்த வேண்டிய பிரசினை. ஆலய ஸ்ததேவர்களுக்குச் செய்யும் பரிசர்யம் ஆராதனை முதலான ஸத்ஸாதனங்கள் இதுவரை ஆஸ்திகர்களுக்கு எமது சாஸ்திரங்களால் வற்புறுத்தப்பட்டுவந்து, அவைகள் இந்த ஆலயப்ரவேச சட்டத்தால் நிஷேதிக்கப்பட்டுவிட்டதாய் கருதப்பட்டால், மனுஷ்யர்களுக்கு இக்கலியில் சுலபமான இந்த ஸத்ஸாதனம் இல்லாமற்போகுமே, அதை இல்லாமல் செய்துவிடுவதா, ஆலய பஹிஷ்காரத்தை ஸர்வதா அனுஷ்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டால், இந்த ஸத்ஸாதனத்திற்கு பதிலாக வேறு வழி கூறப்படவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. தேவாலயதரிசனாதிகள் தீர்த்த க்ஷேத்ராடனாதி ஸத்ஸாதனங்களில் சேர்ந்ததாகும். தேவாலய தரிசனாதிகள் நின்றுபோவதால் தீர்த்தக்ஷேத்ராடனாதி ஸத்ஸாதனங்கள் நின்றுவிட்டதாய் ஆகாது. தேவாலயங்கள் பஹிஷ்கரிக்கப்பட்டுப் போனால் என்ன? அங்குள்ள புண்ய தீர்த்தங்கள் கெட்டுப்போகவில்லை அந்த தேவாலயங்கள் இருந்துவரும் க்ஷேத்ரபூமி மாலின்யம் அடையவில்லை. அவைகள் இந்த அந்த்யஜர்களின் ஸம்பர்கத்தால் மாலின்யம் அடைந்துவிடாது. கிணறு முதலான சொற்ப அளவுள்ள ஜலம்கொண்ட புண்யதீர்த்தங்கள்தான் சண்டாள ஸம்பர்கத்தால் துஷ்டமாய்போய்விடுமேயன்றி அதிக ஜலமுள்ள விஸ்தாரமான புண்ய புஷ்கரணிகளிலேயும் ஜலப்ரவாஹங்கொண்ட புண்ய நதிகளிலேயும் சண்டாளர்களின் ஸம்பர்க்கமடைந்திருந்தாலும் ஸநாதனிகள் ஸ்நானாதிகளைச் செய்யலாம்.

எமது சாஸ்திரங்கள் இதை நிஷேதித்திருப்பதாய் தெரியவில்லை. யாத்ரீகர்கள் இஷ்டப்படி, தீர்த்தாடனாதிகளுக்கு ஸங்கல்பம் செய்துகொண்டு அந்தந்த க்ஷேத்திரங்களுக்குப் போய் சண்டாளப்ரவேசம் நடந்திருந்த தேவாலயங்களின் உட்புறத்தில் இருக்கும் சிறு குளங்களையோ புஷ்கரணிகளையோ விட்டு விட்டு, மற்றவெளிப்புறமுள்ள அந்த க்ஷேத்ர ஸ்தமான புண்ய தீர்த்தங்களிலேயும் புண்ய நதிகளிலேயும் ஸ்நானம் செய்து, தீர்த்தச்ராத்தாதிகளையும் உபவாஸாதிகளையும் செய்து, அந்த க்ஷேத்ரபூமியை பாதசாரியாய் ப்ரதக்ஷிணம் வந்து, அந்தந்த க்ஷேத்ரமூர்த்திகளின் மாஹாத்மியங்களை சிரவணம் செய்து, அவர்களை தியானித்து அங்குள்ள ச்ரோத்ரிய பிராம்மணர்களுக்கு தானபானாதிகளைச் செய்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டால் தீர்த்த க்ஷேத்ராடன பலன் கட்டாயம் வந்துசேரும். அந்த க்ஷேத்திரத்தில் தனிவீடுகளில் தன் சொந்த ஸாலக்ராமாதிகளைப் பூஜைசெய்து அந்த பகவன் மூர்த்திகளை தியானித்து அவர்களின் பெயரைச்சொல்லி தான்செய்யும் ஸத்கர்மாக்களை அர்ப்பணம் செய்தால், அந்தந்த க்ஷேத்திர மூர்த்திகளை சேவித்ததாகவே ஆகும். அந்தந்த மூர்த்திகளைக் கொண்ட ஆலயங்களை பஹிஷ்கரித்ததால் எந்த குறையும் ஏற்படாது. இந்த விஷயத்தில் ஆஸ்திகர்களின் மனம் சஞ்சலமடையவேண்டியதில்லை. இதை உறுதியாகக் கொள்ளலாம். இது விஷயத்தில் ஓர் ஆதாரமும் காணப்படுகிறது. விஷ்ணு ரஹஸ்யத்தில் 10-வது அத்யாயத்தில் விஷ்ணுபக்தர்கள் எங்கெங்கு மூர்த்திகளை பூஜிக்கவேண்டும் என்று பிப்பரபிரசினை செய்ய ஹயக்ரீவமூர்த்தி பகவான் ப்ரதிமாபூஜையை விஸ்தாரமாய் கூறியுள்ளார். அதில் சண்டாளாதிகளின் திருஷ்டிபாதம் விழுந்த மூர்த்திகளை ஸர்வதா பஹிஷ்கரிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருப்பதுடன் அந்தந்த க்ஷேத்திரத்திலுள்ள தேவாலய பிம்பங்கள் எப்படியோ, அப்படித்தான் அந்த க்ஷேத்ரபூமிக்கும் மாஹாத்மியம் உண்டு என்றும் ஸமான பலன் உண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு காணப்படுவதாவது:- "ஸ்ரீஹயக்ரீவ உவாச | சலாசல விபேதேன ப்ரதிமாத்விதயம் மம | சலாது வைஷ்ணவோ விப்ர: ஸ்திரார்த்து அசலா மதா | ஸஹஜா ஹித பேதேன ஸஹஜா த்ரிவிதாஸ்ம்ருதா | தீர்த்த, க்ஷேத்ர, சிலா, பேதாத் ஜலம் தீர்த்தமிதி ஸ்ம்ருதம் | பூபாக: க்ஷேத்ரமித்யுக்தம் ஸாலக்ராமாதிகா சிலா | ப்ரயாக காசீ பதரீ குரு க்ஷேத்ராதிகானிச | பூகண்டானி பவித்ராணி க்ஷேத்ராணி மமமூர்த்தய: | கங்கா புஷ்கர க்ருஷ்ணாத்யா: மமாப்யு: தீர்த்த



மூர்த்தய: | சாலக்ராமசிலாயாம்து பூஜனம் ஸர்வஸம்மதம் | தஸ்யா: ஸஹஜ மூர்த்தித்வாத் ச்வபாகஸ்பர்சனாதினா | ஸாந்நித்யம் மமநாபைதி ஸர்வதா மமஸந்நிதி: | ஸாத்ராப்ரதிஷ்டா பேக்ஷாஸ்தி பூஜயேத்தாம் தினே தினே || ........ஸௌவர்ணீம் ராஜதீம் தாம்ரீம் யாம் காம் சித்வா சிலாமயீம் | ஸ்வஸ்வத்யானாநுஸாரேண நிர்மிதா ப்ரதிமா ஹிதா | தத்ரப்ராண ப்ரதிஷ்டாபனம் மந்த்ரை: வைதிக தாந்த்ரிகை: | குர்வந்தி விதிவத்பஸ் ஸாத் பூஜயேத்தாம் தினே தினே | த்விஜைரேவ ஹி பூஜ்யாஸா ஸந்நிதி; ஸாபிபாதஜை: | யேது வேதேஷ்வதிக்ருதா: தைஸ்ஸைவாபி பூஜ்யதே |", இதன் தாத்பர்யமாவது:— பகவானுடைய விக்ரஹங்கள் இருவகைப்படும். ஒன்று சலப்ரதிமை நடமாடும் விக்ரஹம், மற்றொன்று அசலப்ரதிமை. நடமாடாத விக்ரஹம். சலப்ரதிமை யாதெனில் பிராம்மணன் பகவானுடைய அசையும் விக்ரஹம். அசலப்ரதிமை எனப்படுவது இருவகைப்படும். ஒன்று ஸஹஜமான அசலப்ரதிமை மற்றொன்று ஹிதமான அசலப்ரதிமை ஸஹஜமான அசலப்ரதிமைகளில் மூவகை உண்டு. ஒன்று தீர்த்தமூர்த்தி. இரண்டாவது க்ஷேத்ர மூர்த்தி, மூன்றாவது சிலாமூர்த்தி முதலாவதான தீர்த்தமூர்த்தி அசலப்ரதிமை கங்காநதி, க்ருஷ்ணாநதி, புஷ்கர தீர்த்தக்குளம் முதலானவைகள். இரண்டாவதான க்ஷேத்ர மூர்த்தி அசலப்ரதிமை ப்ரவகம். காசி, பதரி, குருக்ஷேத்ரம் முதலான புண்ய பூமி ப்ரதேசமுள்ள ஊர்கள் சிலாமூர்த்தி அசலப்ரதிமை யாதெனில் சாலிக்ராமம். சாலிக்ராமம் ஸஹஜமூர்த்தியானதால் இதில் எப்போதும் பகவத் ஸன்னிதானம். ஸஹஜமூர்த்திகளில் பகவத் ஸன்னிதானம் எப்போதும் உண்டு. ஹிதமான அசலமூர்த்தி யாதெனில் தங்கம், வெள்ளி, தாம்ரம், கல், மண், மணல், சாந்து முதலானவைகளால் செய்யப்பட்ட அவரவர்களின் தியானத்துக்குத் தகுந்தபடிக்குள்ள லக்ஷணங்கள் அமைந்த விக்ரஹங்கள். அவைகளில் வேதமந்திரங்கள் ஆகமந்திரங்கள் இவைகளின்படி விதியுக்தமாய் ப்ராண ப்ரதிஷ்டாபனாதிகளைச் செய்து பிராம்மணர்களால் பூஜிக்கப்படவேண்டும். அதனால்தான் அவைகளில் பகவத்ஸன்னிதானம் ஏற்படும். சண்டாளாதிகளின் திருஷ்டிபாதம் விழுந்தாலும், பத்து நாட்களுக்கு மேற்பட்டு வேதோக்தமான பூஜை நின்றுவிட்டாலும், பகவத் ஸன்னிதானம் போய்விடும். ஸ்திரீ சூத்ரான் முதலான அவைதிகர்கள் பூஜை செய்யலாகாது. என்று விஸ்தாரமாய் கூறப்பட்டிருக்கிறது.

இது முதலான ப்ரமாணங்களால் க்ஷேத்திரஸ்தமான தேவாலயங்களை பஹிஷ்கரித்ததால் தீர்த்த க்ஷேத்ரயாத்ரா ரூபமான ஸத்ஸாதனங்கள் இனி போய்விடாது என்று ஏற்படுகிறது. இரண்டாவது வகையான ஹிதரூபமாயுள்ள கோயில் விக்ரஹாதிகளான அசல ப்ரதிமைகள் பஹிஷ்கரிக்கப்பட்டாலும்கூட முதலாவது வகையான ஸஹஜரூபமாயுள்ள தீர்த்த மூர்த்திகள் க்ஷேத்ர மூர்த்திகள். சிலா மூர்த்திகள் அநத்யஜதிருஷ்டிபாதாதிகளால் அஷ்டமாய் போகாமல் பகவத் சான்னித்யம் பெற்று விக்ரஹஸ்த பகவத் ஸான்னித்யத்தை, விக்ரஹங்களுக்கு ஸமானமாகவே, அடையப்பெற்றிருப்பதாய். பிரமாணங்கள் அறிவிப்பதால் மேற்கண்டவகையான அசலப்ரதிமைகளை நாம் ஆராதிப்பதில் ஆக்ஷேபணை இல்லை. ஸமானமான பலனும் ஏற்படும். அதனால் ஆலய பஹிஷ்காரத்திற்கு மேற்கண்ட சம்சயங்களால் எவ்வித பாதகமுமில்லை என்பதே எமது தீர்மானம்.

## விசேஷ தினங்கள்.

2—8—47 சனிவாரம் சிரவணம் உப, விஷ்ணுப உப.
13—8—47 புதவாரம் ஏகாசி உபவாஸம்(காலண்டரில் கட்டம்மாறியிருக்கிறது).
16—8—47 சனிவாரம் தர்சம் திலதர்ப்பணம், விஷ்ணுப உப.
19—8—47 மங்களவாரம் நாக சதுர்த்தி.
21—8—47 குருவாரம் நாகபஞ்சமி கருடபஞ்சமி.
27—8—47 புதவாரம் ஏகாதசி உபவாஸம்.
28—8—47 குருவாரம் த்வாதசி தயிர்விரதம் ஆரம்பம்.
29—8—47 சுக்கிரவாரம் வரலக்ஷ்மி விரதம், சிரவணம் உப, விஷ்ணுப. உப, ரிக்வேதிகளுக்கு உபாகர்மம்.
31—8—47 பானுவாரம் பௌர்ணமி யஜுர்வேதிகளுக்கு உபாகர்மம்
1—9—47 சோமவாரம் காயத்ரீஜபம். [விஷ்ணுப. உப.
2—9—47 மங்களவாரம் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் 277-வது வருஷத்திய புண்யதினம்.

மற்ற விவரங்களை மாத்வமித்திரன் காலண்டரில் காண்க. மாத்வ மித்திரன் காலண்டர் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட அணா எழு. வி.பி கிடையாது. மூ[illegible]பணம்தேவை.

Printed By N. Subramania Iyer at Sri Venkateswar Power-Printing Works
Etdied & Published by Bhagavatha Renganathachariar, Kumbakonam.